# அறிக்கை

ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் தனது ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரின் முதலாவது அறிக்கை பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றது

## ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவில் விசாரனை தொடர்பில் ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள்

- 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்தில் கௌரவ (திருமதி) டயனா கமகே அவர்கள் - கௌரவ ரோஹண பண்டார மற்றும் கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து கூடிய சீக்கிரம் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கௌரவ சபாநாயகர் அவர்களினால் நியமிக்கப்ட்ட குழுவின் அறிக்கை 2023.11.14 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. அவ்வறிக்கை கௌரவ சபாநாயகர் அவர்களினால் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் நடவடிக்கைகள்

இந்தக் குழு 2023 நவம்பர் 28 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் பாராளுமன்றத்தின் குழு அறை இலக்கம் 08 இல் கூடி, சம்பந்தப்பட்ட விசேட குழுவின் அறிக்கையை ஆராய்ந்தது. இந்தக் குழுவில் இன்று பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

- கௌரவ சமல் ராஜபக்ஷ (தவிசாளர்)
- கௌரவ விஜித பேருகொட
- கௌரவ தாரக்க பாலசூரிய
- கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து
- கௌரவ கபீர் ஹஷீம்
- கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார
- கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல
- கௌரவ ஜயந்த கெட்டகொட
- கௌரவ சமன்பிரிய ஹேரத்

விசேட குழுவின் அறிக்கையின்படி, கௌரவ சபாநாயகர் அவர்கள் 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் கௌரவ டயனா கமகே (திருமதி), கௌரவ ரோஹண பண்டார மற்றும் கௌரவ கேசுஜித் சஞ்ஜய பெரேரா . ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து கூடிய சீக்கிரம் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கௌரவ சபாநாயகர் அவர்களினால் இநத விடயம் கௌரவ பிரதி சபாநாயகர் கௌரவ அஜித் ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டதை ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவினால் அவதானிக்க முடிந்தது

- கௌரவ அஜித் ராஜபக்ஷ(தவிசாளர்)
- கௌரவ சமல் ராஜபக்ஷ
- கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண
- கௌரவ கயந்த கருணாதிலக்க
- கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்
- கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல
- கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல

2023 நவம்பர் மாதம் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் மேற்படி குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது

சம்பவம் தொடர்பான ஒலி நாடாக்கள் மற்றும் காணொளி நாடாக்களை கண்காணிக்க ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் குழு தீர்மானித்ததுடன் அதற்கமைய குறித்த காணொளி பதிவுகளை குழு ஆய்வு செய்தது. பாராளுமன்ற வீடியோ பதிவுகளில் ஒலி பதிவு செய்யப்படாததால், சமூக ஊடக வலையமைப்புகளில் பரப்பப்பட்ட ஒலி நாடாக்கள் மூலம் வீடியோ காட்சிகளை கண்காணிக்க குழு முடிவு செய்தது குழு தொடர்புடைய வீடியோக்களை அவதானித்தது.

பின்னர் சம்பந்தப்பட்ட விசேட குழுவினால் பெறப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் குழுவினால் அவதானிக்கப்பட்டது.

கௌரவ (திருமதி) டயனா கமகே அவர்களை மூன்று மாதங்களுக்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துவது குழுவின் ஏகமனதான தீர்மானமாகும் கும்.

I. கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா அவர்களின் எதிர்வினை குறித்து கடுமையாக எச்சரிக்கப்பட வேண்டும் என குழுவின் பெரும்பான்மை அங்கத்தவர்களினால் தீர்மானிக்கப்பட்டதுடன் அவரை இரண்டு வாரங்களுக்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துவதற்கு குழுவின் ஒரு உறுப்பினராலும் அவரை இரண்டு மாதங்களுக்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துவதற்கு குழுவின் இரண்டு உறுப்பினர்களாலும் சபாநாயகரால் கடுமையாக எச்சரிக்கப்படுதல் வேண்டும் என நான்கு உறுப்பினர்களாலும் பிரிப்பு (Division) தீர்மானம் எட்டப்பட்டது.

II. கௌரவ ரோஹண பண்டார அவர்கள் குறித்த காணொளியை சமூகமயப்படுத்தப்பட்டமையினால் கௌரவ (திருமதி) டயனா கமகே அவர்களுக்கு ஏற்பட்ட அவதூறுகளை கவனத்தில் எடுத்ததுடன், கௌரவ ரோஹண பண்டார அவர்களை இரண்டு வாரங்களுக்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து

III. இடைநிறுத்துவதற்கு குழுவின் ஐந்து உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டதுடன் அவரை 1 ½ மாதங்களுக்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துவதற்கு குழுவின் இரண்டு உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டது.

**<u>தொடர்புற்ற சம்பவம் தொடர்பாக ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் பொதுவான அவதானிப்புகள்</u>**

- பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற இந்த அநாகரீகமான சம்பவத்தினால் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இது பாராளுமன்றத்தின் மதிப்பை சீர்குலைக்கும் சம்பவமாகும் என குழு உறுப்பினர்கள் அனைவரும் அவதானித்துள்ளனர்.
- அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற சபையிலும் பாராளுமன்ற வளாகத்திலும் எப்போதும் தங்கள் கண்ணியத்தை பாதுகாக்க வேண்டும் என்பதுடன் மற்றவர்களின் கண்ணியத்தையும் பாதுகாக்க வேண்டும், குறிப்பாக பாராளுமன்ற வளாகத்தில், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தாம் கண்ணியமாக நடந்து கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்ற சபாபீடத்திலும் அதன் வளாகத்திலும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி நடைமுறைக்கு வருதல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் விதிகளுக்கும் 1953 இன் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் சட்ட ஏற்பாடுகள் மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் விதிகளுக்கும் உட்பட்டு நடத்தல் வேண்டும் என்பது குழுவின் கருத்தாகும்.
- உறுப்பினர்கள் நற்பண்புடன் செயற்பட வேண்டுமென்பதுடன் அரசியல் பேச்சுக்களில் விசேடமாக பாராளுமன்ற விவாதத்தில் உரிய மொழிப்பயன்பாட்டையும் பிரயோகித்தல் வேண்டும். (பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் VIII ஆம் பாகம் – 30 ஆம் பிரிவு)

- உறுப்பினர் எவரும் எவரேனும் ஆளை வசைபாடுதலோ தொல்லைகொடுத்தலோ அல்லது மிரட்டுதலோ ஆகாது (பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் VIII ஆம் பாகம் – 31 ஆம் பிரிவு)

- உறுப்பினர் ஒவ்வொருவரும் கௌரவத்துடன், பண்புடன் மற்றும் பாராளுமன்றத்தின் கௌரவத்தை குறைக்காமல் தனது சக உறுப்பினர்களை, பாராளுமன்ற பணியாட்டொகுதியினரை அத்துடன் மக்களை மதிக்கின்ற செயலாற்றுதல் வேண்டும். (பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் VIII ஆம் பாகம் – 32 ஆம் பிரிவு)

- 1953 இன் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் 22 ஆம் பிரிவு பின்வருமாறு குறிப்பிடுகின்றது

**பாகம் II**

**பாராளுமன்றத்தால் அல்லது உயர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படக் கூடிய குற்றங்கள்**

பாராளுமன்ற சிறப்புரிமை மீறல்களும் அதற்கான தண்டணைகளும்

22 (1) இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட செயல்கள் அல்லது செய்யாமைகள் ஒவ்வொன்றும், பாராளுமன்றச் சிறப்புரிமைகளின் மீறல் ஒன்றாக இருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

(2) இச்சட்டத்திற்கான அட்டவணையில் (அதன் பாகம் அ என்பதிலாயினுஞ்சரி அல்லது பாகம் ஆ என்பதிலாயிஞ்சரி) குறித்துரைக்கப்பட்ட பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறல் ஒவ்வொன்றும் இதனகத்துப் பின்னர் அதன் சார்பில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின்கீழ் இப்பாகத்தின்கீழ் உயர்நீதி மன்றத்தால் தண்டிக்கப்படற்பாலதான வேண்டும்.

(3) இச்சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் ஆ என்ப தில் குறித்துரைக்கப்பட்டதும் பாராளுமன்றம் சம்பந்தமாக அல்லது அது தொடர்பில் புரியப்பட்டதுமான பாராளுமன்றச் சிறப்புரிமைகள் மீறல் ஒவ்வொன்றும். இப்பாகத்தின்கீழ் அதன் சார்பில் அடங்கியுள்ள ஏற்பாடுகளின்கீழ் பாராளுமன் றத்தால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றாதல் வேண்டும்.

பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பாகம் ஆ பின்வருமாறு கூறுகின்றது

**பாகம் ஆ**

(4) பாராளுமன்றத்தில் அல்லது குழுவில் அல்லது பாராளுமன்ற வளவுகளுக்குள் எவரேனும் உறுப்பினரைத் தாக்குதல், நிந்தை செய்தல் அல்லது வேண்டுமென்று தடுத்தல்

(7) பாராளுமன்ற வளவுக்குள் மரியாதையீனமான நடத்தை

- குறித்த சம்பவத்தில், சம்பவத்தின் ஆரம்பமானது, வேண்டுமென்றே தூண்டுதல், சம்பந்தப்பட்ட சம்பவத்தில் நடத்தை, அச்சுறுத்தல், தாக்குதல் என்பன தொடர்புடைய சம்பவத்தை வீடியோ பதிவு எடுத்தல் என்பன அவதானிக்கப்பட்டன.

- 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குள் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ டயனா (திருமதி) கமகே, கௌரவ ரோஹண பண்டார மற்றும் கௌரவ கே . சுஜித் சஞ்ஜய பெரேரா ஆகியோரின் நடத்தையை ஏற்றுக்கொள்வதற்கு முடியாது என்பது தொடர்பில் போதுமான உண்மைகள் மற்றும் ஆதாரங்கள் இருப்பதாக குழு ஒப்புக்கொண்டது.

<u>**விதந்துரைப்புக்கள்**</u>

மேற்கூறிய அனைத்து அவதானிப்புகளையும் கருத்தில் கொண்டு, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு பின்வரும் பரிந்துரைகளை செய்கின்றது

- பரிந்துரைகளைத் தீர்மானிக்கும் போது கௌரவ விஜித பேருகொட குழு கூட்டத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை.
- இங்கு குழு உறுப்பினர்கள் இரு பிரிவுகளின் கீழ் (split decision) தங்கள் தீர்மானங்களை எடுத்தனர்.
- கௌரவ விஜித பேருகொட, கௌரவ தாரக பாலசூரிய, கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து, கௌரவ ஜயந்த கெட்டகொட மற்றும் கௌரவ சமன்பிரிய ஹேரத் ஆகியோர் (திருமதி) டயனா கமகே, கௌரவ ரோஹண பண்டார மற்றும் கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா ஆகியோரை ஒரு மாத காலத்திற்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துதல் வேண்டும் எனத் தீர்மானித்தார்கள்.
- கௌரவ கபீர் ஹஷீம், கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல அவர்கள் கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் எனத் தீர்மானித்தார்கள்.
- கௌரவ சமல் ராஜபக்ஷ (தவிசாளர்) மேற்படி தீர்மானம் தொடர்பில் தனது கருத்தை வெளியிடுவதை தவிர்த்துக்கொண்டார்.
- அதன் பிரகாரம் பெரும்பான்மையான குழு உறுப்பினர்களின் முடிவின் பிரகாரம் (திருமதி) டயனா கமகே, கௌரவ ரோஹண பண்டார மற்றும் கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் 1953 இன் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் 28 ஆம் பிரிவின்படி, ஒரு மாத காலத்திற்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துதல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

- உறுப்பினர்கள் பெரும்பான்மைக் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரு மாத காலத்திற்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துதல் வேண்டும் என ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு பரிந்துரைக்கின்றது.

**கௌரவ (திருமதி) டயனா கமகே**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**